www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# * அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

குறிப்பு:- அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 14×1=14

1) பயிரம் இல்லது ________ அன்றே

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

2) காழ்வரை நில்லாக் கருங்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு - இப்பாடலடி இடம்பெற்றுள்ள நூல்

அ) கலித்தொகை ஆ) நற்றிணை
இ) குறுந்தொகை ஈ) புறநானூறு

3) காவடிச்சிந்தின் தந்தை என்று அழைக்கப்பட்டவர் யார்?

அ) சென்னிகுளம் அண்ணாமலையார் ஆ) பாரதியார்
இ) பாரதிதாசன் ஈ) முருகன்

4) துன்பப்படுபவர் ________

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

5) கல்வி கற்பிக்கப்படும் இடங்களைப் பள்ளி என்று குறிப்பிடும் நூல்

அ) திவாகர நிகண்டு ஆ) சீவகசிந்தாமணி
இ) திருமந்திரம் ஈ) பெரிய திருமொழி

6) நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?

அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு

7) ஒட்டுப்போடாத
ஆகாயம் போல - அந்த
உலகமும் ஒன்றேதான்......... இக்கவிதையில் பயின்று வருவது

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

8) எறிவாள் - இலக்கணக்குறிப்பு யாது?

அ) பெயரெச்சம் ஆ) வினைத்தொகை
இ) வினையெச்சம் ஈ) அசைநிலை

9) நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது

அ) காய்முன்நேர் ஆ) காய் முன் நிரை
இ) கனி முன் நிரை ஈ) மாமுன் நேர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10) பிம்பம் கதையின் ஆசிரியர்

அ) ஜெயகாந்தன் ஆ) புதுமைப்பித்தன் இ) பிரபஞ்சன் ஈ) வண்ணநிலவன்

11) Touch screen என்பதன் தமிழ்ச்சொல்

அ) திறன்பேசி ஆ) சுற்றறிக்கை இ தொடுதிரை ஈ) நுண்கலைகள்

12) கீதாஞ்சலி என்ற கவிதை நூலுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) தாகூர் ஈ) பிரபஞ்சன்

13) பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

14) யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர் மொழி

அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராஜன் ஈ) புல்

## பகுதி II

### பிரிவு - I

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக: **3×2=6**

15) ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

16) காவடிச்சிந்து என்பது யாது?

17) மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?

18) பாடாண்திணை - விளக்குக

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்:- **2×2=4**

19) இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

20) சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

21) நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல் என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு - 3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:- **7×2=14**

22) மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை? அவை யாவை?

23) ஏதேனும் ஒன்றிற்கு உறுப்பிலக்கணம் தருக.

அ) மலிந்த ஆ) ஈன்ற

24) ஏதேனும் ஒன்றிற்கு புணர்ச்சி விதி எழுதுக

அ) பேரழகு ஆ) பயமில்லை

25) சொல்லைப் பிரித்தும், சேர்த்தும் தொடர் அமைக்க:

அ) பிண்ணாக்கு ஆ) நஞ்சிருக்கும்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



26) பிறமொழிச் சொற்களுக்கான தமிழ் சொற்களை எழுதுக.
அ) பத்திரிக்கை ஆ) வாடகை

27) பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரு தொடரில் அமைத்து எழுதுக:
கலை, களை, கழை

28) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
தமிழர் ஆற்றுத் தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

29) ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

30) பின்வரும் மரபுச் சொல்லை தொடரில் அமைத்து எழுதுக:
அவசரக்குடுக்கை

## பகுதி III

### பிரிவு - I

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக: 2×4=8

31) "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக

32) விரும்பியதை அடைவது எப்படி? குறள் வழி விளக்குக

33) மதினா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

34) வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2×4=8

35) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36) 'மறுவிலாத அரசென இருந்த மாநகர்' - உவமையைப் பொருளுடன் விளக்குக

37) தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துக்களாக திருச்சாழல் உணர்த்துவன யாவை?

38) இன்குலாப், 'உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்' எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக. 3×4=12

39) பொதுவியல் திணை (அல்லது) பாடாண்திணையை விளக்குக

40) பிறிதுமொழிதல் அணி (அல்லது) உருவக அணியை விளக்குக

41) உள்ளுறைக்கும், இறைச்சிக்கும் உள்ள வேறுபாட்டினைச் சான்றுடன் ஆய்க

42) ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன - ஏன்?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



43) இலக்கிய நயம் பாராட்டுக.

"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகள் விழித்து நோக்க,
தென்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ" - கம்பர்

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44) அ) பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க. (அல்லது)

ஆ) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலியத்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

45) அ) மதினா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துக்களை விளக்குக.

46) அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது? (அல்லது)

ஆ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 4+2=6

47) அ) 'உண்டால் அம்ம" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்

ஆ) 'நன்று' என முடியும் குறள்

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com